மலர் : 9 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 10
தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

## ஆகஸ்டு 2009

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विल्लेज मिनिस्ट्री ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

ஆண்டு சந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ.250

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




**TVGM - 2009 ஆகஸ்டு**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

ஏசாயா 36:15

**கர்த்தர் . . .**
**நிச்சயமாய்த்**
**தப்புவிப்பார்.**

எந்தவித ஆலயமுமில்லாத கிராமங்களில் **வாடகை வீட்டில் தங்கியிருந்து, ஆராதனை நடத்தி வரும் ஊழியர்கள், நிலம் வாங்கிய பின்பு, ஜெபவீடு** கட்டுவதற்கு உங்களால் இயன்ற உதவியை TVGM மூலம் செய்யும்படி அன்புடன் அழைக்கிறேன்.



# TAMIL VILLAGE GOSPEL MISSION

**Managing Director    Letter Dated: 07.07. 2009**



கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு,

தேவசமாதானம் உண்டாவதாக!

கர்த்தருடைய கிருபையினால் ஜுன் மாதம் கடைசி வாரத்திலும், ஜுலை முதல் வாரத்திலும் அநேக கிராமங்களை நேரடியாக சென்று பார்வையிட்டு எந்தெந்த கிராமங்களில் **'ஜெபவீடு'** கட்டுவது நல்லது என ஆலோசிக்க கர்த்தர் கிருபை செய்தார். மேலும் C.I.M.மூலம் விஜயவாடாவில் நடைபெற்ற செமினாரில் கலந்து கொள்ளவும், நிர்வாகத்திற்கு ஏற்ற நல்ல ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளவும் கர்த்தர் கிருபை செய்தார்.

**'கிறிஸ்தவ தலைமைத்துவ மையம்'** பதிவு செய்வதற்கு வேண்டிய காரியங்கள் ஆலோசிக்கப்பட்டு ஜெபத்துடன் தயார் செய்யப்பட்டு வருகிறது. ஏற்றக் காலத்தில் பதிவு செய்யப்பட ஜெபியுங்கள்.

**'கிறிஸ்தவ தலைமைத்துவ மையம்'** அமைக்க 5 ஏக்கர் நிலம் கிராமத்தின் உட்பகுதியில் வாங்க உத்தேசமாக ரூ.15 லட்சம் தேவைப்படுகிறது. நாளுக்குநாள் நிலத்தின் விலை விஷம் போல் ஏறிக் கொண்டே போவதால், எதிர்கால ஊழியத் திட்டத்திற்கு நிலம் வாங்குவதையே முதல் குறிக்கோளாக வைத்து ஜெபித்து வருகிறோம். இத்திட்டங்கள் நிறைவேறுவதற்கு பல வருடங்கள் செல்லும் என எதிர்பார்க்கிறோம். ஆனாலும் இப்பொழுதே நாம் ஜெபத்துடன் உழைத்து முயற்சி செய்தால் தான் காலப் போக்கில் அதற்குரிய பலனை காண முடியும் என முழு நிச்சயமாய் நம்புகிறோம்.

மேலும் நம்முடைய நாகர்கோவில் அறிமுகப்பணி அலுவலகத்தில் 10 பெண்கள் ஊழியம் செய்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் தூரமான இடங்களுக்கு அதிக நேரம் பிரயாணம் செய்து ஊழியம் செய்வதால் அவசியமாக ஒரு **'ஆம்னி வேன்'(ரூ.3,50,000)** வாங்கிக் கொடுக்க தீர்மானித்துள்ளோம். இத்தேவையில் உங்கள் பங்கை நிறைவேற்ற அன்புடன் அழைக்கிறோம்.

**தமது . . . பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே.**

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் பணியில்,





**[ஸ்டீபன் கிறிஸ்டோபர்]**

# ஏசாயா 36:15 கர்த்தர் . . . நிச்சயமாய்த் தப்புவிப்பார்.

**க**ர்த்தருடைய வாக்குத்தத்தத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தேவ ஊழியரே, விசுவாசியே!

**கர்த்தர் . . . நிச்சயமாய்த் தப்புவிப்பார்.**

என வாழ்த்துகிறேன்.

வேடன் வலையில் சிக்கிக் கொண்ட கலைமானைப் போல, எப்படி நான் தப்பித்துக் கொள்வேன் என அங்கலாய்க்கும் கர்த்தருடைய பிள்ளையே!

உங்களைத் தேற்றுவதற்காகவே கர்த்தருடைய வார்த்தை கடந்து வருகிறது. நீங்கள் எந்தவிதமான சோதனையில், பிரச்சனையில் சிக்கிக் கொண்டிருந்தாலும் **கர்த்தர் . . . நிச்சயமாய் தப்புவிப்பார்.**

**வேதம் சொல்கிறது: எபி. 2:18** அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்.

ஆதலால் இந்த மாதத்தில் **கர்த்தர் நிச்சயமாய் என்னை தப்புவிப்பார்** என உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள். நிச்சயமாய் தப்புவிப்பார்.

தானியேல் ஜீவனுள்ள தேவனை ஆராதிக்கக் கூடாதபடிக்கு பெரிய சோதனை எழும்பியபோது, அவர் செய்கிற ஒரு அறிக்கையை பாருங்கள். இதே அறிக்கை தான் இன்றைக்கு உங்களுக்கும், எனக்கும் தேவையாக இருக்கிறது.

**தானியேல் 3:17** நாங்கள் ஆராதிக்கிற எங்கள் **தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்;** அவர் எரிகிற அக்கினிச் சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்.

இன்றைக்கு நீங்கள் செய்ய வேண்டிய முதல் அறிக்கை: **நிச்சயமாய் தப்புவிப்பார்** என்பதாகும்.

**தானியேல் 3:18,**விடுவிக்காமல் போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வது மில்லை. நீர் நிறுத்தின பொற்சிலையை பணிந்து கொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக் கடவது என்றார்கள்.

ஒரு வேளை **தேவன் விடுவிக்கா மற்போனாலும்** பொற்சிலையை பணிந்து கொள்வதில்லையென இருதயத்திலே உறுதியோடு அறிக்கை செய்கிறார்கள். அவர்கள் எவ்வளவேனும் ராஜாவினுடைய கட்டளைக்கு பயப்படவில்லை. ஜீவனுள்ள தேவனுக்கே தங்களை அர்ப்பணித்தார்கள்.

**தானியேல் 3:19,20** அப்பொழுது நேபுகாத்நேச்சாருக்குக் கடுங்கோப மூண்டு: சாத்ராக், மேஷாக் ஆபேத்நேகோ என்பவர்களுக்கு விரோதமாய் அவனுடைய முகம் வேறுப்பட்டது; சூளையைச் சாதாரணமாய்ச் சூடாக்குவதைப் பார்க்கிலும் ஏழு மடங்கு அதிகமாய் சூடாக்கும்படி உத்தரவு கொடுத்து,சாத்ராக், மேஷாக்,

ஆபேத்நேகோ என்பவர்களை எரிகிற அக்கினிசூளையிலே போடுவதற்கு அவர்களைக் கட்டும்படி, தன் இராணுவத்தில் பலசாலிகளாகிய புருஷருக்குக் கட்டளையிட்டான்.

கர்த்தருக்காக வைராக்கியமாக இருந்ததினால், தண்டனை குறைய வில்லை. ஏழு மடங்காக தண்டனை கூட்டப்பட்டது.

**என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே!** நீ விசுவாசத்தில் உறுதியாய் இருக்கும்போது, உன் விசுவாசத்தை குலைக்க சாதார ணமாய் ஏற்படுகிற சோதனையை விட ஏழு மடங்கு சோதனை அதிகமாகும் என்பதை மறந்து போக வேண்டாம்.

**யாக்கோபு 1:12** சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கிய பின்பு, கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின **ஜீவகிரீடத்தைப் பெறுவான்.**

**தானியேல் 3:24,25** அப்பொழுது ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் பிரமித்து, தீவிரமாய் எழுந்திருந்து, தன் மந்திரிமார்களை நோக்கி: மூன்று புருஷரை அல்லவோ கட்டுண்டவர் களாக அக்கினியிலே போடுவித்தோம் என்றான்; அவர்கள் ராஜாவுக்குப் பிரதியுத்திரமாக: ஆம், ராஜாவே என்றார்கள்.

அதற்கு அவன்: இதோ, நாலு பேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன்; அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை; நாலாம் ஆளின் சாயல் தேவ புத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது என்றான். அல்லேலுயா.

ஏழு மடங்கு தண்டனை பெருகினாலும் தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ உறுதியாக இருந்தபடியால் அவர்களுக்கும் ஒரு சேதமும் வரவில்லை. கூடுதலாக பாதுகாவலாக தூதனை அனுப்புகிறார்.

**என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே!**

**சங்.91:7** உன் பக்கத்தில் ஆயிரம் பேரும், உன் வலது பக்கத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும் அது உன்னை அணுகாது.

**சங்.91:11**உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி உனக்காக தம்முடைய தூதர்களுக்குக் கட்டளை யிடுவார். ஆமென்.

**மிக முக்கியமாக, ஒரு காரியத்தை கவனியுங்கள்.**

தானியேலை தூக்கிக் கொண்டு போனவர்கள் அக்கினிக்கு இரையானார்கள்.

**தானியேல் 3 :22** ராஜாவின் கட்டளை கடுமையாயிருந்தபடியினாலும், சூளை மிகவும் சூடாக்கப்பட்டிருந்தபடி யினாலும், அக்கினி ஜுவாலையானது சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களைத் தூக்கிக் கொண்டு போன புருஷரைக் கொன்று போட்டது.

**சங்.48:14**இந்த தேவன் என்றென் றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்.

**என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே!**

**ஏசா.41:12** உன்னோடே யுத்தம் பண்ணின மனுஷர் ஒன்றுமில்லாமல் இல்பொருள் ஆவார்கள்.

**ஏசா.54:17** உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்.

**தானியேல் 3: 28,29,** அப்பொழுது நேபுகாத் நேச்சார் வசனித்து: சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர்கள் தங்களுடைய தேவனைத் தவிர வேறொரு தேவனையும் சேவித்துப் பணியாமல், அவரையே நம்பி, ராஜாவின் கட்டளையைத் தள்ளி, தங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுத்ததினால், அவர் தமது தூதனை அனுப்பி, தம்முடைய தாசரை விடுவித்தார்.

ஆதலால் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ, என்பவர்களுடைய தேவனுக்கு விரோதமாகத் தூஷண வார்த்தையைச் சொல்லுகிற எந்த ஜனத்தானும், எந்த ஜாதியானும், எந்தப் பாஷைக்காரனும் துண்டித்துப் போடப்படுவான்; அவன் வீடு எருக்களமாக்கப்படும் என்று என்னாலே தீர்மானிக்கப்படுகிறது; இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லையென்றான்.

தானியேல் நண்பர்களின் வைராக்கியத்தையும், தேவனுடைய செயலையும் பார்த்து நேபுகாத்நேச்சார் கூறுகிற சாட்சியையும், தீர்மானத்தையும் பாருங்கள்.

**முதலாவது:** தங்களுடைய தேவனைத் தவிர வேறொரு தேவனையும் சேவித்துப் பணியாமல், அவரையே நம்பி, ராஜாவின் கட்டளையைத் தள்ளி, தங்களுடைய சரீரங்களை ஒப்புக் கொடுத்தார்கள் என சாட்சி கொடுக்கிறார்.

**இரண்டாவதாக:** இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறு ஒருவரும் இல்லையென்று சாட்சி கொடுக்கிறார்.

மேலும் தேவனுக்கு விரோதமாகத் தூஷண வார்த்தையைச் சொல்லுகிற எந்த ஜனத்தானும், எந்த ஜாதியானும், எந்தப் பாஷைக்காரனும் துண்டித்துப் போடப்படுவான்; அவன் வீடு எருக்களமாக்கப்படும் என்று ராஜா தனது தீர்மானமாக அறிவிக்கிறதை பார்க்கிறோம்.

எத்தனை மேன்மையான அனுபவம்!

**என் அன்பு தேவ பிள்ளையே!** உன்னுடைய பாடுகள், பொறுமை, சாட்சிகள், ராஜாவையே அசைக்கும். நிச்சயமாக உங்கள் பாடுகள் மூலம் தேவனுடைய நாமம் மகிமைப்படும். **உங்களை கர்த்தர் நிச்சயமாக தப்புவிப்பார்.**

**<u>பக்தன் பாடுகிறான்:</u>**

***சேனைகளின் கர்த்தர் நல்லவரே***
***சேதமின்றி நம்மை காப்பவரே . . .***
***எக்காலத்தும் நம்பிடுவோம்***
***திக்கற்ற மக்களின் மறைவிடம்***
***பக்கபலம் பாதுகாப்பும்***
***இக்கட்டில் இயேசுவே அடைக்கலம்***

பாடுவோம், பாடிக்கொண்டே இருப்போம்.

ஏழுமடங்கு நெருப்பின் நடுவிலும் தேவன் நம்மோடிருக்கிறார். அவரே நமது அடைக்கலம், பக்கபலம், பாதுகாவல்.

பின்வருமாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

***கர்த்தர் ... நிச்சயமாய் தப்புவிப்பார்.***

மீண்டும் மீண்டுமாக அறிக்கை செய்யுங்கள். **உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.**

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்'** இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

## இராமநாதபுரம் மாவட்டம் - கமுதி யூனியன்
## 100 - கிராம ஊழியம்

**__நோக்கம்:__ 2009 ஆகஸ்டு 17** திங்கள் காலை 9 மணி முதல் **ஆகஸ்டு 21** வெள்ளி இரவு 10 மணி முடிய **இராமநாதபுரம் – கமுதி யூனியனில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2009 ஆகஸ்டு 17** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம் : 2009 ஆகஸ்டு 21** வெள்ளி இரவு **7 - 10** முடிய

**( 2009 ஆகஸ்டு 17 - 21 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**__உபவாச ஜெபம் நடைபெறும் இடம்__**

**ஏ.ஜி. சர்ச்,**
**கோட்டைமேடு, யூனியன் ஆபிஸ் பின்புறம்,**
**கமுதி - 623 604.**
**இராமநாதபுரம் மாவட்டம்.**
**போன் : 04576 - 223932.**

**__நன்றி__** : உதவி செய்ய முன் வந்த **பாஸ்டர் எபினேசர்** அவர்களுக்கு நன்றி!

**__தகுதி__** : ஆலயமில்லாத கிராமங்களில் 5 நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**__பிரயாணப்படி__** : தமிழ்நாட்டிலிருந்து ரூ. 5 செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**__முக்கிய அறிவிப்பு__** : 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**__சகல தொடர்புகளுக்கும்__** : சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

# தஞ்சாவூர் - திருவிடைமருதூர் யூனியன் 100-கிராம ஊழியம் அறிக்கை

**தேதி : 15.06.2009 முதல் 19.06.2009 முடிய**

**THANKS: Patmos (Dr.Tor & Sis Fera)**




கர்த்தருடைய கிருபையினால் 15.06.2009 முதல் 19.06.2009 வரை **தஞ்சாவூர் மாவட்டம் – திருவிடை மருதுார் யூனியனில் 100**–கிராம ஊழியம் ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல் நாள், கடைசிநாள் கூடுமிடம், உணவு, இனிப்பு மற்றும் பார்சல் செலவுகளை **ஆடுதுறை பெரேயா ஜெபவீடு பாஸ்டர். சோலைதாஸ்** அவர்கள் பொறுப் பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள்.

தமிழ்நாட்டிலிருந்து 15 மாவட்டங்களைச் சேர்ந்த 55 பேர் இந்த ஊழியத்தில் வந்து கலந்து கொண்டார்கள்.

முதல்நாள் ஜெபத்தில் திருவிடைமருதுார் யூனியனில் உள்ள கிராமங்களின் பெயர்களையெல்லாம் வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப் பட்டது. இந்த ஜெபத்தில் **ஆடுதுறை பாஸ்டர். சோலைதாஸ்** அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள்.

பின்பு கிராம ஊழியர்களை 12 குழுக்களாக பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தனித்தனியே தாங்கள் ஊழியம் செய்யப் போகும் கிராமங் களுக்கு ஜெபித்தார்கள்.

ஆடுதுறை **பெரேயா சபையின்** சார்பில் கிராம ஊழியர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. பின்பு 12 குழுவினரும் அவரவர் ஊழியம் செய்ய வேண்டிய கிராம பகுதிகளுக்கு கடந்து சென்றனர். இவர்கள் 5 நாட்கள் கிராமங்களில் தங்கி நடந்து திரிந்து வீடுகள் தோறும் யோவான் சுவிசேஷப் புத்தகங்களைக் கொடுத்து **இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை** அறிவித்தார்கள். இப்படியாக மொத்தம் 11,991 சுவிசேஷப் புத்தகங்களும் 22,000 கைப்பிரதிகளும், 10,000 சிலுவைக் கொடிகளும் இலவசமாக வழங்கப்பட்டன. இறுதி நாளில் சகோ.P.T.கிறிஸ்டோபர் கலந்துகொண்டார்.

இந்த ஊழியத்தின் மூலம் 322 புறமதநண்பர்கள் தங்கள் விலாசங்களை கொடுத்து வேத பாடங்களை தபால் மூலம் அனுப்பக் கேட்டார்கள்.

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு:1 சகோ. சூசைமாணிக்கம். பெஞ்சமின்,ஜோசப் முரளிதரன், இஸ்ரவேல் வீமன், பால்ராஜ்.**

நரசிங்கன்பேட்டை ஊராட்சியிலுள்ள கிராமங்களுக்கு சென்று, சுவிசேஷத்தை அறிவித்து வீடுகள் தோறும் யோவான் புத்தகம் கொடுத்தோம். பெரும்பாலோர் வாங்கிக் கொள்ளவில்லை. துகிலி என்ற கிராமத்தில் ஒருவர் சல்யூட் அடித்து உங்க புத்தகம் வேண்டாம், போய் வாருங்கள் என்று சொன்னார். திருவாடுதுறை கிராமத்தில் காலனியில் வசிக்கும் ஏழை மக்கள் மிகவும் ஆர்வமாக சுவிசேஷத்தை

கேட்டார்கள். காய்ச்சலாக இருந்த ஒரு பெண்ணுக்காக ஜெபித்தோம். கர்த்தர் உடனே சுகம் கொடுத்தார். மொத்தம் 1000 சுவிசேஷப்புத்தகங்களும், 820 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு:2 சகோ. பிரேம் ஆனந்த், எபினேசர்,ஸ்டீபன்ராஜ்,ஜோசுவா, செல்வராஜ்.**

கொடியாளம், முக்கூடை கூத்தனூர் கிராமங்களில் வீடுவீடாக சுவிசேஷப் புத்தகம் கொடுத்தோம். யாவரும் ஆர்வமுடன் வாங்கிக் கொண்டார்கள். அநேகர் ஜெபிக்கும்படி சொன்னார்கள். ஜெபித்தோம். கதிராமங்கலம் என்ற கிராமத்தில் ஒருவர் இந்த புத்தகத்தை இத்தாலியில் போய் கொடு என்று திட்டினார். அதற்கு அவர் மனைவி உனக்கு வேண்டாம் என்றால் வாங்காதே, அவர்களை ஏன் திட்டுகிறாய்? என்றார்கள். சிவராமபுரம் கிராமத்தில் அக்ரஹாரம் தெருவில் புத்தகங்களை கொடுத்தபோது ஒருவர் இது அக்ரஹாரம் யாரும் வாங்க மாட்டார்கள். வேறு வழியாகப் போய் விடுங்கள் என்றார். ஆனாலும் நாங்கள் அங்குள்ள வீடுகளில் புத்தகம் கொடுத்த போது எல்லாரும் ஆர்வமுடன் வாங்கிக் கொண்டார்கள். மொத்தம் 1030 சுவிசேஷப் புத்தகங்கள், 835 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:3 சகோதரி. கஸ்தூரி சுப்பையா, மேரி மீனா,மரியாள், ரூத்பகவதி**

பட்டம் காலனியில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது ஒருவர் சூல் ஆயுதம், காவிஉடை, திருநீறு சகிதமாக ஒரு வீட்டில் இருந்தவரைப் பார்த்து மந்திரவாதி போலிருக்கு என்று நினைத்து அவரிடம் எதுவும் பேசாமல் அடுத்த வீட்டுக்கு கொடுக்க நகர்ந்த போது அவர் ஏம்மா எனக்கு தரமாட்டீர்களா? என்றதும் உடனே உங்களுக்கு இல்லாமலா என்று சொல்லி ஒரு சுவிசேஷப் புத்தகம் மற்றும் சிலுவைக்கொடி கொடுத்த போது ஆர்வமாக வாங்கிக் கொண்டார். ஒரு சிலர் ஜெபிக்கச் சொன்னார்கள். அவர்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1035 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:4 சகோதரி. டோராலாசர், அமிர்தம்,அந்தோணிமேரி, ஷீலா, சமாதானமேரி.**

புதுார், மேலையூர் கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து, சத்தியத்தை அறிவித்தோம். மக்கள் சந்தோஷமாக வாங்கினார்கள். ஒரு வீட்டில் **3** பிள்ளைகள் இவர்களில் **2** பேர் இறந்து விட்டார்கள். இதனால் எப்போதும் அந்த வீட்டில் அழுகையும் சோகமுக மாகவே இருந்தது. இவர்களை சந்தித்து இயேசுவின் சத்திய வசனங்களைச் சொல்லி ஆறுதல் படுத்தி ஜெபித்து விட்டு வந்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள் 810 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:5 சகோதரி. லூயிஸ் அம்மாள், ராணி சந்திரா, கிருபா பழனியம்மாள், ஜோதிமணி, தெபோராள்**

நாங்கள் 9 கிராமங்களில் வீடு வீடாக சுவிசேஷப் புத்தகம் கொடுத்து, **இயேசுகிறிஸ்துவே ஆண்டவர்** என்று அறிவித்தோம். அநேக வியாதியஸ்தர் களுக்காக ஜெபித்தோம். பிறக்கும்போது பார்வையில்லாமல் பிறந்த ஒரு வாலிபப் பெண்ணுக்காகவும் ஜெபித்தோம். இவளுக்கு வேதத்தில் உள்ள பர்திமேயு குருடன் எப்படி பார்வையை பெற்றான் என்று சொன்ன போது இயேசுவை விசுவாசித்து ஏற்றுக் கொண்டாள். மொத்தம் 938 சுவிசேஷப் புத்தகங்களும், 820 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு:6 சகோ.அருள்ராஜ், இஸ்தாக்கி, ஜெபமாலைநாதன், பீட்டர் ராமலிங்கம்**

புழுதிக்குடி என்ற கிராமத்தில் முதலாவது ஊழியம் செய்து கொண்டு வரும் பொழுது ஒருவர் எங்களிடம் 'இங்கு ஊழியம் செய்யும் போது மிகவும் ஜாக்கிரதையாக செய்யுங்கள்' என்றார். நடராஜன் என்பவருக்கு சுவிசேஷத்தைக் கூறினோம். அவர் நான் இந்த பகுதியில் பெரிய மந்திரவாதி. ஆனால் எனது வீட்டில் சமாதானம் இல்லை. எனக்காக வேண்டிக் கொள்ளுங்கள் என்றார். நாங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் கொடுத்த சுவிசேஷப் புத்தகங்களை மக்கள் சந்தோஷமாக வாங்கிக் கொண்டார்கள். மொத்தம் 690 சுவிசேஷப் புத்தகங்களும், 850 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு:7 சகோதரி. மாரியம்மாள், எஸ்தர் பேபி, கிளமெண்ட்ஸ் மேரி, அபியேல் அந்தோணியம்மாள், தேவநேசம்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் வீடு வீடாக சுவிசேஷப் புத்தகங்களை கொடுத்த போது, அன்போடு யாவரும் வாங்கினார்கள். இடையாநல்லூர் கிராமத்தில் திருமணமாகி 10 வருடங்கள் ஆகியும் குழந்தையில்லாமல் கவலை யோடிருந்த பெண்ணுக்கு ஜெபித்தோம். நரிக்குடி என்ற கிராமத்தின் பிரசிடெண்ட் எங்களிடம் வந்து ஜெபம் பண்ணுங்கள் என்றார். ஜெபித்து முடித்ததும் அவர் காணிக்கை ரூ 150/- கொடுத்து அனுப்பினார். இப்படி வரும்போது நரிக்குறவர்களை சந்தித்து அவர்களுக்கும் சுவிசேஷம் கூறினோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 810 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:8 சகோதரி. விமலா, சாந்தி, தெபோராள், ரெபேக்கா லட்சுமி.**

சூரியனார் கோவில் அருகில் ஒரு வாலிபன் எங்களை மதமாற்றம் செய்கிறீர்களா ? என்று மிரட்டி தகாத வார்த்தைகளை பேசினான். நாங்கள் அங்கிருந்து வேறு கிராமத்திற்கு சென்று ஊழியம் செய்தோம். ஒரு முஸ்லீம் பெண்ணிடம் சுவிசேஷம் சொன்னபோது அவள் எங்களை அன்போடு ஏற்றுக் கொண்டு உபசரித்து, நான் முஸ்லீம் ஆனாலும் இயேசுவை விரும்புகிறேன். என்று சொல்லி தனக்காகவும், தன் குழந்தையின் 6 வது பிறந்த நாள் என்று சொல்லி ஜெபிக்கும் படி சொன்னார்கள். ஜெபித்தவுடன் ரூ. 100/- காணிக்கை தந்தார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 840 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:9 சகோதரி. மேரி செல்லாபாய், மணியம்மாள், தேவகிருபை, லீதியாள், சலோமி சம்மனசு**

நாங்கள் 12 கிராமங்களில் வீட்டிற்கொரு யோவான் சுவிசேஷம் கொடுத்தோம். யாவரும் சந்தோஷமாக வாங்கினார்கள். பிராமணர்களும் ஆர்வமுடன் வாங்கினார்கள். நாங்கள் வெயில் நேரத்தில் தெருக்களில் நடந்து செல்லும் போது மக்கள் எங்களை அன்புடன் வரவேற்று தண்ணீர் குடிக்க கொடுத்தார்கள். மொத்தம் 970 சுவிசேஷப் புத்தகங்கள் மற்றும் 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:10 சகோ. மாற்கு மாரியப்பன், சாம்ராஜ், மகாராஜன், கிங் சாலமோன்**

முத்துார் கிராமத்தில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது, இப்படிப்பட்ட புத்தகத்தை கொடுக்காதே திரும்பிப் பாராமல் ஓடிவிடு என்று துரத்தினார்கள்.

அதேபோல அடுத்த தெருவிலும் எங்களை ஏற்றுக் கொள்ளாமல் எதிர்ப்பு தெரிவித்தனர். முஸ்லீம் தெருவில் கொடுத்த போது ஒரு பெண் நாங்கள் இதை யாரும் வாங்க மாட்டோம் பேசாமல் போய் விடுங்கள் என்று துரத்தினாள். மற்ற கிராமங்களில் எந்த எதிர்ப்பும், வரவேற்பும் இல்லை. 1302 சுவிசேஷப் புத்தகங்கள், 860 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:11 பாஸ்டர் ஆல்வின், சகோ.தாவீது, சகோதரி. கிரேஸ்பத்மா, அன்னக்கிளி, பாக்கியம்.**

விளாங்குடி கிராமத்தில் சுவிசேஷம் அறிவித்தபோது, ஒரு மனிதன் 'நீங்கள் எங்கள் ஊரில் வந்து உங்கள் புத்தகங் களை கொடுக்கக் கூடாது, நாங்கள் இந்துக்கள், ஆகவே இங்கிருந்து போய் விடுங்கள்' என்றார். நாங்கள் அவரிடம் நீங்கள் வாங்காவிட்டால் போங்கள். வாங்குகிறவர்களுக்கு கொடுக்கிறோம் என்றோம். உடனே அந்த ஆள் ஊரைக் கூட்டுவேன் என்றார். நாங்களும் ஊரைக் கூட்டுங்கள் என்றோம். அங்கிருந்தவர் களிடம் அவர் கூறியும் யாரும் அவரின் வார்த்தைக்கு மரியாதை கொடுக்க வில்லை. அந்த மனிதனை ஊர் ஜனங்கள் திட்டி அனுப்பி விட்டார்கள். மீண்டும் அந்த கிராமத்தில் கொடுத்தபோது, யாவரும் ஆர்வமுடன் வாங்கினார்கள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 830 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:11 சகோதரி எஸ்தர், அன்னாள், பிச்சையம்மாள், செலின் ஜெயபால்.**

நாங்கள் சென்ற கிராமங்களில் அநேகருக்காக ஜெபித்தோம். கிட்னி பிரச்சனையினால் கஷ்டப்படுகிற ஒரு பெண்ணை சந்தித்து, ஆறுதல் கூறி ஜெபித்தோம். மொத்தம் 1026 சுவிசேஷப் புத்தகங்கள், 875 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம். **தேவனுக்கே மகிமை.**

## இயேசுவை விரும்புவோர் முகாம் அறிக்கை ( 2009 ஜுன் )



கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 20.06.2009 அன்று திருச்சி – துறையூர் யூனியனில் இயேசுவை விரும்புவோர் முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் TVGM உடன் கடிதத் தொடர்பு கொண்டுள்ள 12 புறமத நண்பர்கள் ஆர்வமுடன் வந்து கலந்து கொண்டார்கள். இவர்களுக்கு **இயேசு தான் மெய்யான தேவன்** என்பதை வேதாகமத்தின் அடிப்படையில் எடுத்து கூறியபோது, அவர்கள் ஏற்றுக் கொண்டு இயேசுவுக்கு தங்களை ஒப்புக் கொடுத்தார்கள். ஜீவனுள்ள தேவனுடைய சபையின் **போதகர் ஜேம்ஸ்** கலந்து கொண்டவர்களுக்காக ஜெபித்தார்கள்.

**தேவனுக்கே மகிமை.**

**2009 ஆகஸ்டு**

**இயேசுவை விரும்புவோர் முகாம்**

யூனியன் : காஞ்சிபுரம்
நாள் : 29.08.2009 சனி
நேரம் : காலை 9 மணி

**கூடுமிடம்**

**பாஸ்டர்..ஏசுதாஸ்**
**பவர் A.G.சர்ச்,**
**ஸ்டேட் பேங்க் அருகில்,**
**மெயின் ரோடு,**
**மதுராந்தகம் – 603 306.**
**காஞ்சிபுரம் மாவட்டம்.**
**போன்: 044-27552152**

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## ஜெபத்தைக் கேட்டு ஜெயம் கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

## சாட்சிகள்!

**1. சகோதரி அகிலா, கன்னியாகுமரி.**

நான் +2 தேர்விற்காக ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் உங்கள் ஜெபத்தைக் கேட்டு 1004 மதிப்பெண்களை தந்தார்.

**2. சகோதரி லிஸி, கன்னியாகுமரி.**

எனது பேத்தி 10ம் வகுப்பில் நல்ல மதிப்பெண்களுடன் வெற்றி பெற்றாள்.ஜெபித்த உங்களுக்கு நன்றி.

**3.சகோ.ஜெபமணி பால், பெரம்பலூர்.**

எனது மகன் +2 தேர்வில் வெற்றி பெற ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு ஜெயம் கொடுத்தார். தேவனுக்கே மகிமை.

**4. சகோ. பொன்ராஜ், கோவை.**

எனது பேத்தி 9ம் வகுப்பில் தேர்ச்சி பெற ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் வெற்றி பெற கிருபை செய்தார்.

**5. சகோ.சாமுவேல், கோவை.**

கர்த்தர் உங்கள் ஜெபத்தைக் கேட்டு ஜெமிமா, ஜேனிஸ் ஆகிய இருவரும் 10, 12ம் வகுப்பில் நல்ல மதிப்பெண்களோடு வெற்றி பெற உதவி செய்தார்.

**6. சகோதரி மரியம்மாள், ஈரோடு.**

நீங்கள் ஜெபித்ததுபோலவே +1ல் வெற்றி பெற கர்த்தர் உதவி செய்தார். சந்தோஷமாக உள்ளது.

## புற மத நண்பர்கள் வாழ்வில் இயேசு செய்த அற்புதங்கள்!

**1.சகோதரி அருள், க.குமரி.**

நானும் என் மகனும் இருசக்கர வாகனத்தில் சென்ற போது ஒரு ஆட்டோவில் மோதி விபத்து ஏற்பட்டது. இயேசுகிறிஸ்து எந்த ஆபத்தும் ஏற்படாமல் அற்புதமாக காத்தார்.

**2.சகோதரி பரிமளா, இராம்நாடு,**

என் அப்பாவிற்கு மூட்டு இறங்கி விட்டது என்று ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். நீங்கள் ஆப்பரேஷன் இல்லாமல் இயேசு சுகம் தருவார் என கடிதம் எழுதியி ருந்தீர்கள். அதே போல் ஆப்பரேஷன் இல்லாமல் இயேசு நல்ல சுகத்தைத் தந்தார்.

**3.சகோ. சுந்தர்ராஜ், கரூர்.**

என் அத்தைக்காக ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு சுகம் கொடுத்தார்.

**4.சகோதரி திவ்யா, சென்னை.**

என் சகோதரியின் மகள் 10ம் வகுப்பில் தேர்ச்சி பெற ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் 411 மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற செய்தார். தேவனுக்கே மகிமை.

**5.சகோதரி சாந்தி, புதுக்கோட்டை.**

என் மகன்கள் இருவரும் தேர்வில் வெற்றி பெற ஜெபிக்கக் கேட்டிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு வெற்றியைக் கொடுத்தார்.

TVGM தலைமை அலுவலகத்திற்கு ஜெபத்திற்காக கடிதம் எழுதும் மக்களுக்காக ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் காலை 9 - 12 மணி வரை நடைபெறும் உபவாச ஜெபத்தில் ஜெபிக்கிறோம். உங்கள் ஜெப விண்ணப் பங்களை இன்றே எங்களுக்கு அனுப்பி வையுங்கள். நாங்கள் ஜெபிக்கிறோம்.

## TVGM 12 மணி நேர துதி ஆராதனை & வாக்குத்தத்த தேவசெய்தி

**கர்த்தர் . . . நிச்சயமாய்த் தப்புவிப்பார். ஏசாயா 36:15**

### நடு இரவு ஜெபம் -மறு நாள் துதி ஆராதனை

| | |
|---|---|
| **நாள் :** **31.07.2009** வெள்ளி | **நாள் :** **01.08.2009** சனிக்கிழமை |
| **நேரம் :** 7PM-12Mid Night | **துதி ஆராதனை நேரம் :** 7AM-7PM |
| **இராப்போஜனம் :** இரவு 12மணி | **வாக்குத்தத்த செய்தி :** 7PM-8PM |

### உபவாச ஜெபம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் காலை 9 முதல் மதியம் 12 மணி வரை உபவாச ஜெபம் நடைபெறும்.

### நடைபெறும் இடம்

**TVGM தலைமை அலுவலகம்**
**100 – கிராமம்,**
**சோமரசம் பேட்டை ( ஆஸ்பத்திரி ஸ்டாப் ) திருச்சி.**

## நியூசிலாந்து - பாஸ்டர் விக்கி அவர்களுக்கு நன்றி





TVGM ஸ்தாபகர் சகோ. பி.டி.கிறிஸ்டோபர் அவர்களை **ஏலீம் தமிழ் திருச்சபையின் 6வது ஆண்டுவிழாவில் தேவசெய்தியளிக்க அழைப்புக் கொடுத்து, விமான டிக்கெட் வழங்கி சகல உதவிகளையும் செய்து கொடுத்து,** ஒரு வார காலம் ஊழியம் செய்ய வாய்ப்புக் கொடுத்த ஏலீம் தமிழ் சபை **போதகர் பாஸ்டர் விக்கி** அவர்களுக்கு TVGM சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் தங்கள் சபையில் செய்திக் கொடுக்க வாய்ப்பளித்த **பாஸ்டர் தாஸ்** ( பாப்டிஸ்ட் சர்ச் ) அவர்களுக்கும், சிறு கூட்டங்கள் ஒழுங்கு செய்து கொடுத்த **சகோ.மனோகர் பிளாரன்ஸ்** அவர்களுக்கும் நன்றி.

## TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகளின் ஸ்கூல் பீஸ் தேவைகளுக்காக ஜெபியுங்கள்! உதவுங்கள்!

| வகுப்பு | பிள்ளைகள் எண்ணிக்கை | தேவை |
|---|---|---|
| 3ம் வகுப்பு | 4 | ரூ 400 |
| 4ம் வகுப்பு | 6 | ரூ.12,226 |
| 5ம் வகுப்பு | 3 | ரூ. 600 |
| 6ம் வகுப்பு | 11 | ரூ.13,778 |
| 7ம் வகுப்பு | 10 | ரூ. 2,474 |
| 9ம் வகுப்பு | 3 | ரூ. 1,585 |
| 10ம் வகுப்பு | 7 | ரூ. 3,755 |
| 12ம் வகுப்பு | 2 | ரூ. 3,500 |
| | 46 | 38,318 |

குறிப்பு : 1. நமது சிறுவர் இல்லப் பிள்ளைகள் அரசாங்க பள்ளியிலும் மற்றும் தனியார் பள்ளியிலும் படித்து வருவதால், அரசாங்க பள்ளியில் பீஸ் குறைவாகவும், தனியார் பள்ளியில் கூடுதலாகவும் உள்ளது.

2. இதுபோக ஸ்கூல் யூனிபார்ம் 46 பிள்ளைகளுக்கு தேவைப்படுகிறது.

### 100 - கிராம ஊழியம் பத்திரிக்கை சந்தா
### இந்தியா - ரூ.25 வெளிநாடு ரூ. 250

100–கிராம ஊழியம் பத்திரிக்கைக்கு 2009ம் ஆண்டுக்குரிய ஆண்டு சந்தா இதுவரையிலும் அனுப்பாதவர்கள் தயவுசெய்து உடனே அனுப்பி புதுப்பித்துக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஏனெனில் எந்தவித தொடர்பும் இல்லாதவர்களுக்கு இரண்டு மாதங்கள் கழித்து பத்திரிக்கையை நிறுத்தி விட முடிவு செய்துள்ளோம்.

### உண்டியல் காணிக்கை

ஒவ்வொரு மாவட்டத்திலும் அநேக பிள்ளைகள் TVGM உண்டியல் வாங்கி காணிக்கை சேகரித்து TVGM அறிமுகப்பணியாளர் மூலம் செலுத்தி வருகிறார்கள்.

வருடத்திற்கொரு முறை TVGM தலைமை அலுவலகத்திலிருந்து சகோ.பேரின்ப பாலன் அல்லது சகோ. ஆரோக்கியம் ஆகிய இரண்டு பேரில் யாராவது ஒருவர் தமிழ்நாடு முழுவதும் சென்று ஜெபித்து, உண்டியலை திறந்து காணிக்கைக்கு ரசீது கொடுத்து வருகிறார்கள். ( புதிதாக உண்டியலில் காணிக்கை சேகரித்து தர விரும்பினால் எங்களுக்கு தபால் மூலம் தெரியப்படுத்துங்கள்)

ஒருவேளை உங்கள் வட்டாரத்தில் TVGM சார்பில் எங்கள் அனுமதி கடிதத்துடன் நீங்கள் சென்று ஜெபித்து, காணிக்கைக்கு ரசீது கொடுத்து, மொத்த பணத்தை TVGM க்கு அனுப்பி எங்களுக்கு உதவி செய்ய விரும்பினால் தயவுசெய்து தபால் மூலம் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக். 5:16**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

***திங்கள்:*** TVGM டிரஸ்ட்டுக்கு FCRA ஆர்டர் கிடைக்கவும், சிறுவர் இல்லத்திற்கு கோட்டா அரிசி கிடைக்க DSO ஆர்டர் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

***செவ்வாய்:*** 2008 - 2009 TVGM வரவு செலவு கணக்குகள் தணிக்கை செய்யப்படவும், மாவட்ட பதிவாளர் அலுவலகம், வருமானவரி அலுவலகம், டெல்லி Home Ministry ஆகிய அரசாங்க அலுவலகத்திற்கு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட கர்த்தர் கிருபை செய்தார். இந்த ஆண்டிலும் கடனில்லாமல் மீதியை காண கர்த்தர் கிருபை செய்தார். ஜெபித்த, கொடுத்த, உழைத்த ஒவ்வொருவரையும் கர்த்தர் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

***புதன்:*** 2009ம் ஆண்டில் இன்னும் 10 ஜெபவீடுகளாவது கிராமங்களில் தகுதியான ஊழியர்களுக்கு கட்டிக் கொடுப்பதற்கு கர்த்தர் பொருளாதார வாசலை திறக்கும்படி ஜெபியுங்கள்.

***வியாழன்:*** 2009ம் ஆண்டில் '100 கிராம ஊழியம்' புதுக்கோட்டை மாவட்டத்தில் மாதந்தோறும் நடத்துவதற்கு ஒரு தலைவரை TVGM சார்பில் ஏற்படுத்தவும், அனைத்து சபையினரும் சுவிசேஷ தாகத்துடன் பங்கு பெறவும் ஜெபியுங்கள். இதற்கு தேவையான சுவிசேஷப் புத்தகங்கள், தன்னார்வத் தொண்டர்கள், பொருளாதாரங்கள் தடையின்றி சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

***வெள்ளி:*** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர் அவர்களை TVGM ஆதரவாளர்களுக்கு நேரடியாக அறிமுகம் செய்யவும், TVGM ஐ நேசிக்கிற போதகர்களிடம் சென்று ஜெபிக்கவும், ஒவ்வொரு தேசமாக அறிமுகக் கூட்டங்கள் நடத்தவும், வாஞ்சிக்கிற திட்டங்கள் நிறைவேற கர்த்தர் கிருபை செய்ய ஜெபியுங்கள். TVGM வளர்ச்சியை வாஞ்சிக்கிறவர்கள் எங்களோடு அவர்களாகவே தொடர்பு வைக்க ஜெபியுங்கள்.

***சனி:*** TVGM நிர்வாக அலுவலகம் சீக்கிரமாக திறக்கப்பட்டு, தகுதியான உதவியாளர்கள் நியமிக்கப்பட்டு, TVGM ஊழியங்கள் சிறப்பாக நடைபெற ஜெபியுங்கள்.

***ஞாயிறு :*** TVGM தலைமை அலுவலகத்தில் தங்கியிருந்து ஜெபிக்க அநேக சகோதரிகளை கர்த்தர் கொண்டு வர ஜெபியுங்கள். இரவும், பகலும் துதி ஆராதனை நடைபெற கர்த்தர் நல்ல ஆலோசனைகளையும், உதவியாளர்களையும் கொடுக்க ஜெபியுங்கள்.

TVGM அலுவலகத்திற்கு அர்ப்பணிப்புள்ள, ஆத்துமபாரமுள்ள, அனுபவமுள்ள நல்ல உதவியாளர்களை கர்த்தர் எழுப்பும்படி ஜெபியுங்கள். அரசாங்க அதிகாரிகளின் கண்களில் கர்த்தர் தயவை கட்டளையிட ஜெபியுங்கள்.

**மிகவும் சிறியவராகிய . . . ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள். மத்.25:40**

## TVGM சிறுவர் இல்லம் - திருச்சி



கர்த்தருடைய பெரிதான கிருபையாலும், **ஏலிம் தமிழ் சபை போதகர் விக்கி** அவர்களின் மிகுந்த பிரயாசத்தினாலும், பொருளுதவியினாலும் திருச்சி TVGM சிலுவர் இல்லத்தை 2009 மே மாதத்தில் கட்ட ஆரம்பித்துள்ளோம்.

TVGM சிறுவர் இல்ல கட்டிடத்திற்கான Blue print பெரிய அளவில் இருந்தாலும் உத்தேசமாக ¼ பகுதியை முதலாவது கட்டலாம் என ஆலோசித்து ஜெபத்துடன் வேலை நடைபெற்று வருகிறது.

2009 அக்டோபர் மாதம் பிரதிஷ்டை செய்ய வாஞ்சித்து, ஜெபித்து முயற்சித்து வருகிறோம்.

2009 மே மாதம் அஸ்திபாரம் போடும்பொழுது திட்டமிட்ட அளவு படி மட்டும் கட்டாமல் 1st புளோர் செல்ல படிக்கட்டு வசதிக்காக கூடுதலாக ஒரு பகுதியை கட்ட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டபடியால் ரூ500,000 ( ஐந்து லட்சம் வரை ) கூடுதலாக தேவைப்படும் என எதிர்பார்க்கிறோம்.

**1 ச.அடி கட்டுவதற்கு ரூ.900/-** அல்லது சற்று கூடுதல் ஆகும். என இஞ்சினியர் கூறியுள்ளார்கள். ஆதலால் கர்த்தரால் ஏவப்பட்டவர்கள் TVGM சிறுவர் இல்ல கட்டிடப்பணிக்கு 1 சதுர அடிக்குரிய காணிக்கையோ அல்லது பல சதுர அடிகளுக்குரிய காணிக்கையோ **TVGM Social Service** பெயரில் டிராப்ட் அனுப்பி வைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். Bank to Bank அனுப்ப விரும்புபவர்கள் E-mail : **100village@tvgm.org** வுடன் தொடர்பு கொண்டு A/C நம்பரைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக !**

## மொழிபெயர்ப்பாளர்கள் தேவை!

**"100– கிராம ஊழியம்"** மாதாந்திர பத்திரிக்கை மற்றும் சிலுவைக் கொடி கைப்பிரதியை தமிழ் அல்லது ஆங்கிலத்திலிருந்து இந்தியாவிலுள்ள மற்ற மொழிகளில் மொழிபெயர்த்து தமிழ்நாட்டில் பிரிண்ட் செய்வதற்கு வசதியாக கம்யூட்டரில் டைப் செய்து D.T.P. வேலைகள் செய்து PDF Formatல் திருச்சிக்கு அனுப்பி வைப்பதற்கு நல்ல மொழிபெயர்ப்பாளர்கள் தேவை. கிராம ஊழியத்தில் தங்கள் பங்காக இந்த உதவியை செய்து தர விரும்புபவர்கள் TVGM உடன் தொடர்புகொள்ளுங்கள்.

## TVGM அலுவலக பணிக்கு நிரந்தரமாக ஆட்கள் தேவை

கர்த்தருடைய ஊழியத்தில் பணிபுரிய வேண்டும் என்ற ஆர்வமுள்ளவர்கள் பின்வரும் வேலைக்கு ஆயத்தமாக இருந்தால் எதிர்பார்க்கும் சம்பளத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

1. **அம்பாசிடர் கார் டிரைவர்**
   (லைசன்ஸ்வுடன் டவுனில் ஓட்டி நல்ல அனுபவமுள்ளவர்கள்.)
2. **தமிழ் / ஆங்கிலம் கம்யூட்டரில் செய்யத் தெரிந்தவர்கள்**
3. **வார்டன்** ஹைஸ் ஸ்கூலில் படிக்கும் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்க, கிறிஸ்துவுக்குள் வழிநடத்தவும், பிள்ளைகளை கருத்தாய் கவனிக்கவும் அழைப்பு பெற்ற வார்டன் தேவை.
4. உத்தேசமாக **20** பேருக்கு சமைத்து கொடுக்க பொறுப்புள்ள அனுபவமுள்ள சகோதரி தேவை.
5. கிராம ஊழியங்களை கவனிக்க, சர்வே பண்ணி, ஜெபவீடு கட்டும் பணிகளை கவனிக்க அனுபவமுள்ளவர்கள் தேவை.

**விண்ணப்ப படிவம் பெற ரூ.10/- M.O. செய்யுங்கள்**

## TVGM அறிமுகப்பணி அலுவலகம்
## 2009 ஜுன் மாத ஊழிய அறிக்கை

**க**ர்த்தருடைய பெரிதான கிருபையினால் 2009 ஜீன் மாத ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதித்தார்.

பல மாதங்களாக ஜெபித்து, முயற்சித்த **ஆண்டார்குளம்** அறிமுகப்பணியை ஜீன் 14ம் தேதி நிறைவேற்ற கர்த்தர் கிருபை செய்தார். **சகோ. சாம் மோகன்** அவர்கள் மிகவும் பொறுப்புடன் உதவி செய்து, அன்று மதியம் நம் அலுவலக சகோதரிகளுக்கு அவர்கள் இல்லத்தில் உணவு வழங்கி ஊழியத்தைத் தாங்கினார்கள். மேலும் புதிய சபைகளில் அறிமுகப்பணி செய்வதற்கான வாய்ப்புகளை தேவனே தரும்படி ஜெபித்து முயற்சி செய்து வருகிறோம்.

ஜீன் மாத இறுதி நாளில் **தேரூர்** பஞ்சாயத்தின் கீழ் உள்ள **மாங்குளம்** என்ற கிராமத்தில் சுவிசேஷ ஊழியம் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். மிகக்குறைவான குடும்பங்கள் அக்கிராமத்தில் இருந்தாலும் சுவிசேஷத்திற்கு எந்தவித எதிர்ப்பும் இல்லை. பின்தொடர்பணி செய்ய விலாசங்களும் கிடைத்தன.

சென்ற மாத ஊழிய அறிக்கையில் நவம்பர் மாதத்தில் நாங்கள் இருக்கும் வீட்டை காலி செய்ய வேண்டியுள்ளது எழுதியிருந்தேன். ஆனால் கர்த்தருடைய பெரிதான கிருபையினால், எங்கள் வீட்டின் உரிமையாளரான அன்பு தாயார் அவர்கள் நாங்கள் உடனே வீட்டை காலி செய்யத் தேவையில்லை எனவும் தொடர்ந்து வீட்டை உபயோகித்துக் கொள்ளுமாறும் அனுமதியளித்துள்ளார்கள். **தேவனுக்கே மகிமை.**

கிறிஸ்துவின் பணியில்,
**ஷோபனா இவாஞ்சலின்,**

**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001
செல்: **98658 26424** போன் : **04652 - 277251**

## "இயேசுவே இரட்சகர்" - கைப்பிரதி

ஒரு சில கர்த்தருடைய பிள்ளைகள் எங்களைச் சந்திக்கும்பொழுது, தங்கள் தெருக்களிலோ அல்லது பக்கத்து கிராமங்களிலோ ஊழியம் செய்ய கைப்பிரதிகள் கேட்பதுண்டு. நேரடியாக வருபவர்களுக்கு சிலுவைக்கொடிகள் மற்றும் கைப்பிரதிகளும், விசுவாசகைப்பிரதி கழகத்தில் சென்னையில் நாங்கள் விலைக்கு வாங்கினதை இலவசமாக கொடுத்து வருகிறோம்.

தற்சமயம் **"சாமுவேல் சிங்"** அவர்கள் எழுதிய **"இயேசுவே இரட்சகர்"** என்ற கைப்பரதி எங்களிடம் உள்ளது. உங்கள் ரப்பர் ஸ்டாம்ப் (முகவரி) குத்துவதற்கு வசதியாக அடியில் இடம் உள்ளது.

உண்மையாகவே உங்களுக்கு கைப்பிரதி தேவைப்பட்டால் உங்கள் முழு முகவரி, தொலைபேசி எண் மற்றும் அனுப்பவேண்டிய கொரியர் சர்வீஸ் போன்ற விபரங்களை எங்களுக்கு எழுதுங்கள்.

நீங்கள் **இயேசுவே இரட்சகர்** கைப்பிரதி கொடுத்ததினால் யாராவது உங்களுடன் தொடர்பு கொண்டால் அந்த சாட்சியையும், முகவரியையும் எங்களுக்கு தெரியப்படுத்தி உதவுங்கள். நாங்கள் வேதப்பாடம் அனுப்பி வைக்கிறோம்.

உங்களுக்கு எத்தனை கைப்பிரதிகள் வேண்டும் எனவும் எந்தவிதத்தில் ஊழியம் செய்யப்போகிறீர்கள் என்பதையும் எங்களுக்கு தெளிவாக எழுதினால் மற்ற விபரங்களை உங்களுக்கு போஸ்ட் கார்டு மூலம் தெரிவிப்போம். சம்மதித்தால் கைப்பிரதிகள் அனுப்பி வைப்போம்.

## கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு டிராப்ட் , செக் எடுத்து அனுப்ப வேண்டிய முறை

**TAMIL VILLAGE GOSPEL MISSION (100-** கிராம ஊழியம், ஜெபவீடு)
**T.V.G.M. SOCIAL SERVICE** (சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)
**T.V.G.M. PUBLICATION** ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

ஸ்தாபனத்தின் பெயரில் டிராப்ட் எடுக்க முடியாவிட்டால் தயவுசெய்து
**MR. STEPHEN CHRISTOPHER, SB 12491010 18538 CANARA BANK,**
**Code : 1249 Puthur Branch, TRICHY, PIN - 620 017, Tamil Nadu.**
**என்ற பெயரில் டிராப்ட் எடுத்து, கடைசி பக்கமுள்ள TVGM தலைமை அலுவலக முகவரிக்கு நோக்கத்தையும் உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை குறிப்பிட்டு அனுப்பி உதவுங்கள்.**
**எங்கள் Email: 100village@tvgm.org- மூலம்**
**நீங்கள் காணிக்கை அனுப்பியுள்ள விபரத்தை தெரியப்படுத்துங்கள்.**

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

Return Request
TVGM Publication Trust
4/274, Hundred Village,
Somarasampettai,
Trichy - 620 102. India.

POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011
Posting Date 25th at H.P.O. Trichy.

**நன்றி** : 2009 ஜுன் 28ம் தேதி பொன்மலைப்பட்டி **திரு.வில்சன் ஜெரின்** குடும்பம் தங்கள் **திருமண நாளை** ( ஜுன் 29 ) முன்னிட்டு TVGM சேப்பலில் தேவசெய்தியளித்து , சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு சிறப்பு விருந்தளித்தார்கள். இவர்களை அறிமுகம் செய்து வைத்த அபுதாபி– அப்போஸ்தலர் சபை மூப்பர் **திரு. செல்வராஜ்** குடும்பத்தினருக்கு எங்கள் நன்றி.

## முக்கிய ஜெபக் குறிப்பு

**அபுதாபி–அப்போஸ்தலர் சபை ஸ்தாபகர் பாஸ்டர் ராஜகுமார்**
ஐயாவின் சரீர சுகத்திற்காக தொடர்ந்து ஜெபியுங்கள்.






## TVGM தலைமை அலுவலக முகவரி

**ஜெப உதவி,காணிக்கை மற்றும் சகல தொடர்புகளுக்கும்:-**

MR.STEPHEN CHRISTOPHER,
DIRECTOR.
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
100- VILLAGE ( Veeranginallur Road )
SOMARASAMPETTAI,(Hospital Stop)
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.

STD Ph : 0-431 - 2607241
CELL : 94871 92763
94435 44628
Email : 100village@tvgm.org

*Website :*
**www.tvgm.org**
தினசரி வாக்குத்தத்தம், செய்தி 100 கிராம ஊழிய அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി हन्ड्रेड विलेज मिनिस्ट्री